OCTOBER - 1999

[KA 526]

M.D. (Siddha) DEGREE EXAMINATION.

(New Regulations)

Sirappu Maruthuvam

Paper I — வர்மம், என்பு முறிவு மற்றும் தொக்கணம்

Time : Three hours | Maximum : 100 marks

Answer ALL questions

PART A

1. நெஞ்செலும்பு நடுவரி (Mid sternal line); சேத்ரு நடுவரி (Mid clavicular line) இவற்றில் அமைந்துள்ள வர்ம இடங்கள் யாவை? அவற்றில் நான்கினை பற்றி விரிவாக எழுதுக. (20)

2. வர்ம கண்ணாடி நூலில் கூறியபடி கழுத்தின் மேல் சிரசு வரை படுவர்மம், தொடு வர்மம் எத்தனை? அவற்றின் பெயர்கள் யாவை? அவற்றில் மூன்று படுவர்மம் பற்றி விரிவாக எழுதுக. (15)

3. (அ) வர்மம் பட்டவர்களை பார்க்கும் குறிப்புகள் யாவை? அதற்குரிய சோதனை முறை யாது? (5)

(ஆ) புய வர்மத்தில் அடிபட்டால் ஏற்படும் குறிகுணம், பாதிக்கப்படும் பேசி, நரம்பு யாவை? வெளி நோயாளி பகுதியில் இவ்வகை நோயாளிக்கு மேற்கொள்ளபட்ட சிகிச்சை விவரி? (10)

PART B

4. கையில் எவ்விடங்களில் பாதிப்பு ஏற்பட்டால் இரத்தினி நரம்பு (Ulnar Nerve) செயலிழக்க வாய்ப்பு உள்ளது? அதனால் பாதிக்கும் பேசிகள் (Muscles) யாவை? அதற்குரிய மருத்துவ பரிசோதனை முறைகள், குறிகுணங்கள், நமது மருத்துவ முறை — விவரி. (20)

5. (அ) தொடை என்பு (Femur) மேலந்தம் முறிவு வகைகள், குறிகுணங்கள் யாவை?

(ஆ) பச்சை கொம்பு என்பு முறிவு உதாரணத்துடன் விவரி (15)

6. சிறு குறிப்பு வரைக (15

(அ) செகண வாதம்

(ஆ) பாத வீழ்ச்சி (Foot drop)

(இ) அடங்கல்

**APRIL - 2000**

**[KB 528]**

## M.D. (SIDDHA) DEGREE EXAMINATION

**Third Year**

**(Old/New Regulations)**

**Paper I — SIRAPPU MARUTHUVAM**

வர்மம், என்பு முறிவு மற்றும் தொக்கணம்

**Time : Three hours** **Maximum : 100 marks**

**Answer ALL questions**

1. புய என்பின் நடு காண்டம் முறிந்தால் எந்த நரம்பு பாதிக்கக் கூடும்? அதனால் ஏற்படும் குறி குணங்களுடன். மருத்துவமும் எழுதுக. (20)

2. (அ) அடங்கல் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

(ஆ) வர்மம் அடிப்பட்டு இடப்பவர்க்குரிய இளக்கு முறை, தடவு முறை மற்றும் வர்மத்திற்குரிய உள் மருந்து இரண்டும், புற மருந்து இரண்டும் செய் முறையோடு விளக்குக. (15)

3. எலும்பு முறிவு என்றால் என்ன? காரணம், வகைகள் யாவை?

எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்பதனை குறி குணங்களுடன் நோய் கணிக்கும் முறைகளையும் எழுதுக. (15)

4. படு வர்மம், தொடு வர்மம் என்றால் என்ன? ஒவ்வொன்றிற்கும் ஆறு வர்ம இடங்கள், குறி குணம், சிகிச்சை – விளக்குக. (20)

5. (அ) முக வாதம் (உரகன் வலி) நோய்க்குரிய குறி குணங்கள் எந்த வர்மத்தில் அடிபட்டால் காணப்படும்? அதன் இடம், குறி குணம், மருத்துவம் – விளக்குக.

(ஆ) கிரிசாந்து கியாழம்; திருமேனி தைலம். (15)

6. வாத நோய்கள் புற மருத்துவமாகிய தொக்கணத் தினாலும் தீரும் என்பதனை 'தேரன் தரு' என்ற நூலில் கூறியவற்றை எழுதுக. (15)

OCTOBER - 2000

[KC 528]

M.D. (SIDDHA) DEGREE EXAMINATION

Third Year

(Old/New Regulations)

Branch III — SIRAPPU MARUTHUVAM

Paper I— வர்மம், என்பு முறிவு மற்றும் தொக்கணம்

Time : Three hours | Maximum : 100 marks

Answer ALL questions.

## PART A

1. நேர் வர்மம், பிடரி வர்மம், கல்லிடைக் காலம் இவ்வர்மங்களின் இடம், பாதிக்கப்பட்டால் ஏற்படும் குறிகுணங்கள், இளக்கு முறை யாவை? இம்மூன்று வர்மம் பாதிக்கப்பட்டால் உடற்கூறு படி எவ்வுறுப்புகள் பாதிக்கும்? (15)

2. தொடுவர்மம் என்றால் என்ன? எத்தனை? பத்து இடங்களின் பெயர் கூறி விளக்குக. (15)

3. எந்த வர்மம் கொண்டால் உரகன் வலி போன்று குறி குணங்கள் ஏற்படும்? இதனால் பாதிக்கப்படும் நரம்பின் பெயர், குறிகுணம், இளக்கு முறை, மருத்துவம், தொக்கணம் வழங்கும் முறை எழுதுக. (20)

## PART B

4. எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள நோயாளியை அனுசரிக்கும் பொதுவான விதிகள், நோய் கலைப்பு, எலும்பு முறிவினால் ஏற்படும் சிக்கல்கள் (Complication) யாவை? (15)

5. இரு கைகளும், இரு கால்களும் திடீரென செயலிழப்பு ஏற்பட்டால் எந்த இடத்தில் பாதிப்பு ஏற்பட்டால் இக்குறி குணம் தோன்றும்? நமது உள் நோயாளிகள் பகுதியில் மேற்கொண்ட சிகிச்சை முறைகள், தொக்கணம், பயிற்சி இவற்றை விவரி. (20)

6. தொக்கணம் என்றால் என்ன? அவற்றின் வகைகள் மற்றும் தொக்கணம் பற்றி விரிவாக வரைக. தசை மெலிவுக்கு (Atrophy) நமது மருத்துவமனைகளில் பயன்படுத்தும் தைலங்கள் யாவை? அவற்றில் ஏதேனும் ஒரு தைலத்தில் சேரும் சரக்குகள் யாவை? (15)

---